செய்தி வெளியீடு எண்: 342 நாள் : 13.07.2016

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்கள் சென்னை, கிரீம்ஸ் சாலையில் உள்ள வணிகவரித்துறை அலுவலக கூட்டரங்கில் இன்று (13.07.2016) வணிகவரித்துறை செயல்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில் வணிகவரி மற்றும் பதிவுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்/வணிக வரித்துறை ஆணையர் முனைவர்.ச.சந்திரமௌலி, இ.ஆ.ப., அவர்கள், வணிகவரித்துறை கூடுதல் ஆணையர்கள், அனைத்து கோட்ட நிர்வாக மற்றும் செயலாக்கப்பிரிவு இணை ஆணையர்கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகையில், தமிழக மக்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த மாநில அரசுக்கு வணிக வரிகள் மூலம் திரட்டப்படும் நிதி ஆதாரம் மிக முக்கியமானது மட்டுமல்ல, முதன்மையான ஆதாரமாகவும் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

2016–17 ஆம் நிதியாண்டில் ஜுன்–2016 மாதம் வரை ரூ.14604.51/– கோடிகள் மொத்த வரி வருவாயாக வசூலிக்கப்பட்டுள்ளது. இவ்வரி 2015–16ல் இதே காலத்தில் வசூலான ரூ.13698.55/– கோடிகளுடன் ஒப்பிடும்போது ரூ.905.96/– கோடிகள் கூடுதல் வருவாய் ஆகும். அதாவது 6.61% வளர்ச்சி விகிதத்தை அடைந்துள்ளது.

2016–17 ஆம் நிதியாண்டில் நமூனாக்களை கூர்ந்தாய்வு செய்தல் மூலமாகவும், செயலாக்கப்பிரிவிலிருந்து பெறப்பட்டுள்ள கருத்துருக்களை செயல்படுத்துதல் மற்றும் பழைய வரி நிலுவைகளை வசூல் செய்தல் மூலமாகவும் வணிகவரித்துறை அலுவலர்கள் கூடுதல் முயற்சி எடுத்து வரிவருவாயைப் பெருக்கி அதிக வளர்ச்சி விகிதத்தினை எட்டவேண்டும்.

மொத்த வணிகர்கள் எண்ணிக்கையில், 86% வணிகர்கள் நமூனாக்களை இணையம் மூலமாக தாக்கல் (e-filing) செய்துள்ளார்கள். மேலும் மொத்த வரி வருவாயில் 87% இணையம் மூலமாக (e-payment) பெறப்பட்டுள்ளது.

வணிகவரித்துறையின் வரிவிதிப்பு மற்றும் செயலாக்கம் ஆகிய இரு பிரிவுகளும், போலிவணிகம் செய்பவர்கள் மீது ஒருங்கிணைந்த தொடர் நடவடிக்கை எடுத்தும், தவறான உள்ளீட்டு வரிவரவு பெற்று பயனடைந்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்து வரிவருவாயினை அதிகப்படுத்த வேண்டும். மேலும், எதிர்மறை வளர்ச்சி மற்றும் குறைவான வளர்ச்சி அறியப்படும் வணிக இனங்களில் கூர்ந்தாய்வு செய்து காரணங்களைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். துரித நடவடிக்கை மேற்கொண்டு நிலுவையிலுள்ள வரி வருவாயை வசூலிக்க வேண்டும். மேலும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு அரசு வருவாயை பெருக்கவேண்டும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் ஏழை எளிய மக்களுக்கான சிறப்புத் திட்டங்களுக்கு நமது துறையின் மூலம் கிடைக்கும் வரி வருவாய் முக்கியப்பங்காற்றுவதால் நமது துறையின் பணிகள் மிகவும் அர்ப்பணிப்பு உணர்வோடு இருக்கவேண்டும் என மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

கூடுதல் தலைமைச் செயலாளர் /
வணிகவரி ஆணையர்

வெளியீடு:- இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.

நாள்:- **13.7.2016.**